ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

विद्युत्तुल्यः चपलचपलः ज्ञानलेशः कदाचि-
न्निस्सारोऽयं भव इति महेशान्तराभाति किंचित् ।
तेनाहं त्वच्छुभदचरणध्यानसक्तः कथं स्यां
नूनं शंभो सहजकृपया पाळनीयस्सुतस्ते ॥

𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌃 𑌚𑌪𑌲𑌚𑌪𑌲𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑍇𑌶𑌃 𑌕𑌦𑌾𑌚𑌿
𑌨𑍍𑌨𑌿𑌸𑍍𑌸𑌾𑌰𑍋𑌽𑌯𑌂 𑌭𑌵 𑌇𑌤𑌿 𑌮𑌹𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑌾𑌤𑌿 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍 ।
𑌤𑍇𑌨𑌾𑌹𑌂 𑌤𑍍𑌵𑌚𑍍𑌛𑍁𑌭𑌦𑌚𑌰𑌣𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑌕𑍍𑌤𑌃 𑌕𑌥𑌂 𑌸𑍍𑌯𑌾𑌂
𑌨𑍂𑌨𑌂 𑌶𑌂𑌭𑍋 𑌸𑌹𑌜𑌕𑍃𑌪𑌯𑌾 𑌪𑌾𑌳𑌨𑍀𑌯𑌸𑍍𑌸𑍁𑌤𑌸𑍍𑌤𑍇 ।

ஹேமகேசா ! ஸகல உலகங்களுக்கும் ஈசனான ஹே சம்போ ! எப்பொழுதாகிலும் ஒரு சமயம் மின்னல்போல் மிகவும் சஞ்சலத்துடன் கூடிய இந்த சம்ஸாரம் உபயோகமற்றது. இதிலொன்றும் ஸாரமில்லை என்கிற அற்பமான ஞானமானது எனது உள்ளத்தில் தோன்றுகிறது. இவ்விதம் தோன்றும் இந்த ஆபாஸமான ஞானத்தால் உம்முடைய உத்தமமான சுகத்தையளிக்கும் பாதபத்மங்களை விதிப்படி தியானித்து இஷ்டசித்தியைப் பெறுவதற்கு நான் எப்படி அருகனாவேன். ஹே சங்கரா ! உமது புத்திரனான என்னிடமிருந்தும் வேறொன்றையும் எதிர்பாராமல் இயற்கையில் விளங்கும் உமது கருணையால் என்னை ரக்ஷிக்கவேண்டும்.

சலனமற்ற சிறந்த ஞானத்தைப் பெற்றவர்களால் மாத்திரம் உமது சரணங்களை விதிப்படி தியானித்து மோக்ஷமென்னும் பரம புருஷார்த்தத்தையடைய முடியுமேயல்லாமல் என் போன்றவர்களால் எதாகிலும் ஒரு சமயத்தில் மின்னலொளிபோல் ஒரு க்ஷணம் உண்டாகும் அற்ப அறிவால் தியானித்து ஸித்திபெறுவது எங்ஙனம் ஸாத்தியமாகும். ஆகையால் ஹே பரமேசுவரா ! உமது கருணையால் என்னைப் பரிபாலிக்க வேண்டுமென்று ஒருவர் பிரார்த்திக்கிறார். சுபம் !

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

விபவ-ஹு ஆனி-மீ கூஉ

## "உபதேசபஞ்சகம்"

(242-வது பக்கத்தொடர்ச்சி.)

यत्किञ्चित्फलमुद्दिश्य यज्ञदानतपःक्रिया ।
क्रियते बहुलायासं तत्काम्यं परिकीर्तितम् ॥

𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌫𑌲𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑌦𑌾𑌨𑌤𑌪𑌃𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 ।
𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌬𑌹𑍁𑌲𑌾𑌯𑌾𑌸𑌂 𑌤𑌤𑍍𑌕𑌾𑌮𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥

உபயோகமில்லாத இழிவான அற்பபலத்தைக்கருதி அதிக சிரமப்பட்டு அனுஷ்டிக்கப்படும் யாகம், தானம், தவம், முதலிய கர்மாக்களுக்குக் காம்ய கர்மாவென்று பெயர், இவ்வித கர்மாக்களில் விருப்பம் கூடாதென்று கூறுகிறார். பிறப்பிறப்பென்னும் பிணியைப் போக்கி மோக்ஷ சுகத்தையளிக்கும் சக்திபெற்ற சிறந்த கர்மாக்களை காமதேனுவைக் கலப்பையில் கட்டி உழுவது போல் அற்பபலத்தில் உபயோகப்படுத்தக் கூடாதென்று இதின் கருத்தாகும். காம்ய பலத்தைக் கருதாமல் அவாவர்களுக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை விதிப்படி அனுஷ்டிப்பதால் யாதுபயன் கிட்டுமென்று நிகழும் சங்கைக்கு மேல் வாக்கியத்தால் விடை பகருகின்றார்.

पापौघः पारधूयतां 𑌪𑌾𑌪𑍌𑌘𑌃 𑌪𑌰𑌿𑌧𑍂𑌯𑌤𑌾𑌂 ।

லோகத்திலுள்ள ஸகலப் பிராணிகளும் உத்தமமான ஜன்மாவையோ, அல்லது பகவானுடைய ஸந்நிதியையோ, அடைந்து எப்பொழுதும் அழிவில்லாத ஆனந்தத்துடன் வஸிக்க முடியாமல் பலவாறான ஜன்மாவை அடைந்து சொல்லவொண்ணாத பல கஷ்டங்களை அனுபவிப்பதற்குக் காரணம் அந்தந்தப் பிராணிகளால் முற்பிறவியிற் செய்யப்பட்ட பாபகர்மாக்களே யாகும். பாப ஸம்மந்தமே இல்லாத கேவலம் புண்யாத்மாக்களுக்கு எப்பொழு

தும்ஆனந்தத்தைத்தவிர துக்கலேசம்கூட ஏற்படாதென்பது திண்ணம். நம்மால் அடையப்பட்ட இந்த ஜன்மாவிற்கும் அனுபவிக்கப்படும் கொடிய கஷ்டங்களுக்கும், இனி அனுபவிக்கப்போகிறதற்கும், நம்முடைய பாபம்தான் காரணம். நம் ஸ்வ்தர்மத்தை விதிப்படி நன்கு நாம் அனுஷ்டித்தால் ஸகல பாபங்களும் நம்மை விட்டு விலகிவிடும். கர்மானுஷ்டானத்தால் சித்தத்திலுள்ள தோஷங்கள் போய் சுத்தியேற்பட்டு கெட்ட கர்மாக்களில் வெறுப்பும் நற்கர்மங்களில் பற்றுதலும் ஏற்படும். இதினால் முன் செய்திருந்த பாபங்களையும் ஒழித்து இனியும்ஜன்மாவுக்குக் காரணமான பாபச்செய்கையும் இவனிடம் இல்லாதபடியால் உத்தமமான லோகத்தை அடைகிறான் என்று அறிவிக்கப்படுகிறது. **पापौघः வாவௌளவஃ** என்பதால் கோடிக்கணக்கான முன் ஜன்மாக்களில் செய்யப்பட்ட பாபக் கூட்டங்கள் பூராவும் நாசத்தை அடைகின்றது என்று போதிக்கிறார்.

**भवसुखे दोषोऽनुसन्धीयतां ஸவஸுகெ தொஷொநுஸந்தீயதாம்**

தற்காலம் விஷயசுகத்தை அனுபவிக்க வேணுமென்று அதில் எனக்கு அதிக அவாயிருப்பதால் உத்தமமான பதவியைப்பெற நான் எப்படி அருகனாகுவேன் என்று தோன்றும் சங்கையை விலக்குகிறார். **भवसुख इति ஸவஸுகெ இதி** முந்திச் சொல்லியபடி வேதாத்யயனம். அதில் விதிக்கப்பட்ட கர்மானுஷ்டானம் அந்த மந்திரங்களால் பகவதாராதனம் முதலான காரியங்களைச் செய்தால் அதினால் சித்தத்திற்கு ஏற்பட்டிருந்த தோஷம் பூராவும் விலகி சுத்தமாக ஆய்விடும். நற்கர்மாக்களை அனுஷ்டிப்பதற்கு இடையூறாயிருக்கும் சித்த தோஷங்கள் விலகிவிட்டால் அநித்ய வஸ்துக்களிலும் ஆபாஸமான விஷய சுகங்களிலும் தோஷதிருஷ்டி ஏற்பட்டு வைராக்கியமுண்டாகும். ஆகையால் ஸம்ஸார ஸம்மந்தமாய் நமக்கு சுகமேற்படுகிறதென்று சித்ததோஷமுள்ளகாலத்தில் தோன்றினாலும், தோஷம் விலகிய சமயத்தில் ஸம்ஸாரத்தில் வெறுப்பும், இது தோஷமுள்ளது. ஸகலமான கஷ்டங்களுக்கும் இதுதான் காரணம். இதில் அற்பமேனும் சுகமில்லை என்கிற தோற்றமேற்படும். இவ்விதமே.

**कृच्छ्रेणामेध्यमध्ये नियमिततनुभिः स्थीयते गर्भवासे**
**कान्ताविश्लेषदुःखव्यतिकरविषमो यौवने चोपभोगः ।**

वामाक्षीणामवज्ञा विहसितवसतिर्वृद्धभावोऽप्यसारः
संसारे रे मनुष्या वदत यदि सुखं स्वल्पमप्यस्ति किंचित् ॥

க்ருச்ச்ரேணாமேத்யமத்யே நியமிததநுபி: ஸ்தீயதே கர்ப்பவாஸே காந்தாவிச்லேஷது:கவ்யதிகரவிஷமே யௌவநே விப்ரயோக: । வாமாக்ஷீணாமவஜ்ஞா விஹஸிதவஸதிர்வ்ருத்தபாவோऽப்யஸார: ஸம்ஸாரே ரே மநுஷ்யா வதத யதி ஸுகம் ஸ்வல்பமப்யஸ்தி கிஞ்சித் ।

(இன்னும் வரும்) உபபத்திராதிபர்.

---

## விவாஹவயது மசோதா கண்டனங்கள்,

### திருவண்ணுமலை,

1–6–28 மாலை 6-மணிக்கு ஷை மசோதாவைக் கண்டிக்கத் திருவண்ணுமலை ஆலயத்திலுள்ள மூலை மண்டபத்தில் பிரும்மஸ்ரீ உ-வே. வக்கீல் விஜயராகவாசாரியாரவர்கள் தலைமையில் ஓர் கூட்டங்கூடியது. காவ்யகண்ட ஸ்ரீ கணேசசாஸ்திரிகள் தம் சிஷ்ய வர்க்கத்துடன் வந்திருந்தார். ஷை சட்டத்தைக் கண்டிப்பவரே வரவேண்டுமென நோட்டீஸ் போட்டிருந்தும் ஜஸ்டிஸ் கக்ஷியைச் சார்ந்த சிலரும் சீர்திருத்தத்தில் அபிமானங்கொண்ட சில காங்கிரஸ்காரர்களும் ஸபையைக்கலைத்து ஷை சட்டம் வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்ற முன்னேற்பாட்டுடன் வந்திருந்தனர்.

கௌரவப்பிரசாரகர் ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் ஷை மசோதாவைக் கண்டிக்கும் தீர்மானத்தை ப்ரேரித்துப் பேசும்பொழுது சாஸ்திரங்களில் உங்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் நம்பிக்கையுள்ளவரை சிக்ஷிக்காமலிருக்கவும் ஸௌகர்யத்தைக்கோரியும் 12-வயதிற்குள் விவாஹம் செய்வோரை ராஜ்யகாரணத்தைக்கொண்டாவது பாதிக்காமலிருக்க இச்சட்டத்தைஎதிர்த்துஏகமனதாகத் தீர்மானத்தைநிறைவேற்றி ஸ்ரீமதாசார்யபக்தியை வெளியிடுங்களென உருக்கமாகப்பேசினர். ஸ்ரீ ஸப்ராவைஸர் வெங்கட்டராமய்யர் அதை ஆமோதிக்க ஸ்ரீ காவ்யகண்டசாஸ்திரி ருதுமதீவிவாஹமும் சாஸ்திரிசம்மதமானதால் ஷை தீர்மானத்திலுள்ள அசாஸ்திரீயமென்ற பதத்தை எடுத்துவிட்டால் தான் அதை ஆமோதிப்பதாகவும் இல்லையேல் எதிர்ப்பதாகவும் சொன்னர். ஆபத்பக்ஷமாகவே ருதுமதீவிவா

ஹத்தை சாஸ்திரம் ஒப்பியதாகவும் ருதுவுக்குமுன்தான் விவாஹம் நடைபெறவேண்டுமென எண்ணிறந்த தர்மநூல்கள் முறையிடுவதால் அதை அசாஸ்திரீயமென ஸ்ரீ காவ்யகண்டர் கூறமுடியாதென ஸ்ரீ சர்மா கூறினர். அதை அவர் ஏற்றதால் எப்படியாவது சத்ருமத்தியில் இத்தீர்மானம் சச்சரவின்றி நிறைவேற வேண்டுமென்றெண்ணி அத் திருத்தத்தை ஸ்ரீமான் சர்மா ஏற்ருர் ஆதலால் தீர்மானத்திற்கு அநுகூலமாக ஓட்டுதேடவேண்டிய பாரம் ஸ்ரீ காவ்யகண்டருக்கே வந்தது தனக்காகவாவது வாக்களிக்கும்படி அவர் வேண்டினர். பெரும்பான்மையோர் ஸாதகமாகவாக்களிக்க சிலக்குருவுக்குமிஞ்சிய சிஷ்யர்கள்விரோதமாக வாக்களித்து ஸ்ரீ சர்மா தந்திரவலையால் ஸ்ரீ காவ்யகண்டருக்கு சிஷ்யனுகக் கூறி குருவிடம் வருந்தினர். வழக்கப்படி தீர்மானங்களும் கையெழுத்துக்களும் கவர்னர் வைஸ்ராய்களுக்கு அனுப்பப்பட்டன. மறுநாள் பில்லுக்குச் சாதகமாக ஓர் கூட்டம் போடுவதாக சிலர் சொல்ல ஸ்ரீ சர்மா அவர்களது பிரார்த்தனைக் கிணங்க பல அப்ராம்மணர்கள் அதற்கு விரோதமாகவும் பில்லுக்கு விரோதமாகவும் வாக்களிப்பதாகக் கூறியதால் அச்சபைநடை பெறவில்லை. 3உ ஸ்ரீசர்மாவேலூர்பிரயாணமானுர்.

## வேலூர்.

4—5—28 மாலை 5-மணிக்கு வேலூரிலுள்ள ஸைதாபேட்டை ஸ்ரீ சங்கரமடத்தில் மசர் S. E. ராமநாதய்யர் தலைமையில் ஓர் சபை கூடியது. ஸ்ரீ சர்மா ஷை சட்டத்தினுல் வரும் தீங்குகளை விளக்கி ஸ்ரீ சின்னஸ்வாமி சாஸ்திரிகள் முதலிய பலர் தீர்மானத்தை ஒட்டிப் பேச ஏகமனதாக நிறைவேறி பல கையெழுத்துக்களுடன் வழக்கப்படி அநுப்பப்பட்டது.

## கோசப்பேட்டை.

அன்றிரவு 8-மணிக்கு ஷை பேட்டை புது அக்ராஹாரத்தில் மகா-ா-ஸ்ரீ எஸ். சுப்ரமண்யய்யரவர்கள் அக்ராஹாரத்தில் ஓர் சபைகூடிற்று. பற்பல உத்யோகஸ்தர்கள்வந்திருந்தனர். ஸ்ரீவத்ஸ சோமதேவசர்மாவின் நீண்ட உபன்யாஸத்திற்குப், பிறகு ஸ்ரீPN அருணுசலசாஸ்திரி B.A., L.T. சுந்திரேசய்யர், ஓவர்ஸியர் முதலிய பலர் அதை ஆமோதிக்கக்கண்டனத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறி பலகையெழுத்துக்களுடன் வழக்கப்படி அனுப்பப்பட்டது

வட ஆற்காடு வைதிக வரவேற்பு ஸபை ௬-டி தேதியில்கூடிய ஸபையில் மகா-௱-ஸ்ரீ V. R சுப்ரமண்ய அய்யரவர்கள் மிருசுதார், மில் ப்ரொப்ரைடர் அவர்கள் உபசரணைக் கமிட்டித்தலைவராகவும், ஸ்ரீ நாட்டு தேவராஜராவ் வக்கீல் பெ. வ. ஸ்ரீநிவாஸாசாரியார், ஸ்ரீ நாராயணசாமி அய்யர், ரிடைர்ட் தாசில்தார், வக்கீல் விஜய ராகவாசாரியார், முதலியவர்கள் உபதலைவராகவும், சேதுராமய்யர் வக்கீல், M. அநந்தாசாரி ரிடையர்ட் ஸப்பின்ஸ்பெக்டர், சூபர்வைஸர் வெங்கிட்டராமய்யர், முதலியவர்கள் உபசரணைக்கமிட்டி அங்கத்தினராகவும் எஸ். ஸ்ரீநிவாஸய்யர் பிஏ., எல்டி. காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். ஜூன்மீ 18, 19௨ களில் ஜில்லாசபை நடைபெறும். இவ்விஷயமாகக் கடிதப்போக்கு வரத்துக்கள் யாவும்போளூர் மில் ப்ரொப்ரைடரிடமே வைத்துக்கொள்ளவேண்டும்.

திருப்பத்தூர்

5—6—28 மாலை 5-மணிக்கு வாணியம்பாடி திருப்பத்தூர் குமாரஸ்வாமி கோவில் வக்கீல் ஸ்ரீ சிவராமய்யர் அக்ராசனத்தின் கீழ் ஓர்பெரும் ஸபை கூடிற்று. வழக்கப்படி பிரும்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் விவாஹவயது மசோதாவால் வரும் தீமையை விளக்கிக் காட்டி இவ்வூர் ஸ்ரீ சிருங்கேரிமடத்து சிஷ்யர்களாயிருந்தாலும் கும்பகோணம் மடத்திலிருந்து வந்தவர்களிடத்து அன்பு பாராட்டி ஸ்வதர்மமான இக்கண்டனத்திற்கும் ஜில்லாசபைக்கும் உதவிபுரிய வேண்டுமென்றும், ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஸ்வாமிகளது அபார கருணையும், ஒப்பற்றதர்மாபிமானமுமே யானிங்கு வரக்காரணமெனக் கூறி தீர்மானத்தை ப்ரேரிக்கும்படி கேட்க உள்ளூர் ப்ரபல தனிகரான சேஷகிரியய்யர் ஹெட்மாஸ்டர் பி. ஏ. கணபதியய்யர் B.A., L.T. யூனியன் சேர்மன் ராமச்சந்திரய்யர் முதலிய பல கனவான்கள் ஆமோதிக்க ஏகமனதாக நிறைவேற்றிப் பல கையெழுத்துகளிட்டார்கள். ஸகல ஜனங்களும ஸ்ரீ காமகோடிபீடாதிபதிகளைக் கொண்டாடி மறுநாளிருந்து ஸந்தியாவந்தனத்தைப்பற்றி ஓர் உபன்யாசம் செய்யும்படி வேண்டினர். ஜில்லாசபைக்குப் பல ப்ரதிநிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸ்ரீமான் சுப்ரமண்ய அவதானி, செங்கல்வராயர், முதலிய தர்மிஷ்டர்கள் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு அளவில்லை. மறுநாள் குடியாத்தம் சென்றார் ஸ்ரீ சர்மா.

R. பவானி சங்கரய்யர். திருப்பத்தூர்

## ஸ்ரீமதாசாரியாளும் அத்யயன நியமமும்.

தற்காலத்தில் பொதுவாக ஸ்மார்த்தர்கள் தங்களது மதத்தையும், மதாசாரியர்களையும், மதஸ்தாபனங்களையும் நன்கு உணரவில்லை. ஆதலால் தேசியபத்திரிகை வாயிலாக ஸ்ரீமதாசாரிய விஜயத்தை அறிந்து, ஸ்ரீமாதாசாரியாள் மதவிஷயமாக என்னென்ன ப்ராசாரம் செய்கிறார்? அந்த சங்கம் சங்காதிபதி இதைச் செய்தார். அதைச் செய்தாரென; நீசோபமையைக் காட்டி வம்பளப்பதைக் கேளாமலிருக்க முடியவில்லை. உண்மையாக ஏனைய மடாதிபதிகளைப் போவில்லாமல் ஆரியதர்மத்தை ஸம்ரக்ஷிக்க ஆதிசங்கரரே அவதரித்தாரெனத் தோன்றும் தற்கால காமகோடிபீடாபதி செய்துள்ள எண்ணிறந்த தர்ம ப்ரவிருத்திகளை அறியாதாரனேகர். உண்மையான மதாபிமானிகளும், அறியாத பல தர்மஸ்தாபனங்களை ஆசாரியார் ஆங்காங்கு நடத்தி வருகின்றனர். யானறிந்த பல ஸ்தாபனங்களுக்குள் மாயவரம், திருவழுந்தூரில் நடந்துவரும் ரிக்வேத நியமாத்யயன பாடசாலை கலியிலும் க்ருதயுக தர்மத்தை நிலை நிறுத்துவதாயிருக்கிறது. அதிலுள்ள அத்யாபகருடைய ஆதரவினால் அங்கு சென்று அனைத்தையும் கண்ணாரக் காணும் பாக்கியம் பெற்றேன். அது பண்டைய காலத்து குருகுலத்தை நினைவூட்டியது. மாணவர்கள் பஞ்சபஞ்ச உஷ:காலத்தில் எழுந்து விதிப்படி தேஹசுத்தி செய்து தேவதாஸ்துதிபாடி அத்யயனம் செய்ய ஆரம்பிக்கின்றனர். ஆன்ஹிக தர்மத்தை அழகாக வகுத்து அவ்வாசாரியர் கற்பித்த வண்ணம் ஆசாரத்தில் அனுஷ்டித்துக் காட்டுகின்றனர். ப்ராதஸ்நானமும், காலந்தவறாத ஸந்தியோபாஸ்தியும், ஸமிதாதானமும், ப்ரம்மயக்ஞமும், கிருஷ்ணாஜினமௌஞ்ஜீபலாசதண்டதாரணமும், வைதிகலெக்ஷ்மியின் விசேஷத்தைவெளியிடுவதாயிருந்தது.

இவ்வளவோடு வேத விதிப்படி பிக்ஷாசரியத்தை நடத்தி வரும் அம்மாணவர்களை அவர்கள் அத்யயனம் செய்தவைகளைப் பரிக்ஷித்தேன். ரிக்வேத ஸம்ஹிதையும், பதமும், சிக்ஷை வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் இவைகளையும் ரகுவம்ச காவ்யத்தையும், ஒவ்வொரு மாணவர்களும் அழகாகக் கூறினர். அவ்வாசாரியருடைய ஊக்கத்தினால் மாணவர்களது

கல்வியும் ஒழுக்கமும், பரமாசாரியளது நோக்கமும், மேல்மேலும் விருத்தியாகி வருகிறது. இதுபோன்ற நியமாத்யயன சாலை பாரத நாட்டிலும் விசேஷமாக தக்ஷிண தேசத்திலும் இல்லையெனக் கூறத்தகும். இதுபோன்ற சாலை இன்னும் சில தோன்றினால் வைதிகர்களுக்குள்ளேயுள்ள குறைகள் நீங்கி ஆஸ்திக்யம் பரவி ஆசாரம் நிறைந்து அதர்மம் குறைந்து நாடு செழிக்கும். ஒவ்வொரு மதாபிமானிகளும் இன்னியமாத்யயன சாலையைக் கண்டு களிக்க வேண்டுகிறேன்.

வேதம் வாழ்க! ஸ்ரீ ஜகதாசாரிய பாதுகை வாழ்க!!

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

## ஆஸ்திகர்களுக்கோர் பிரார்த்தனை.

தற்சமயம் விவாஹ ஸம்பந்தமாக விசேஷமாய் விவாதிக்கப்படும் விஷயத்தை அறியாதார் ஒருவருமிரார். இச்சமயம் அயர்ந்திருந்தோமாகில் யாகம், சிராத்தம் முதலியவைகள் செய்யக்கூடாதெனவும், தேகபுஷ்டிக்காக ஒவ்வொருவரும் இவ்வளவு அவ்வளவு மாம்ஸம் புஜிக்கவேண்டுமெனவும் கட்டாயச்சட்டம் தோன்றலாம். இதற்கு முன் இதேபோல் தோன்றிய சட்டங்களை ஸ்ரீமதாசாரியபாதாள் பல பக்தர்களைக் கையெழுத்திட்டு மறுக்கும்படிச் செய்து அதைத் தோன்றாதடித்தார். இம்முறையும் சளையாது அபரிமித தனச் செலவு செய்து எனதாசாரியரான ஸ்ரீ ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா முதலிய பல தர்மப்ரசாரகர்களையும், சம்பள ப்ரசாரகர்களையும் நியமித்து எண்ணிறந்ததுண்டு ப்ரசுரங்களை அச்சிட்டு அதைக் கண்டித்து வருகிறார்கள். ஓர் தூது அனுப்பவும், ஜில்லாஸபைகளையும் நடத்தி வருகிறார். ஸ்ரீமதாசார்யராக்ஞையைசிரஸாவஹித்துஎனதாசாரியர்ஸ்ரீ ஸ்ரீவத்ஸ் சர்மா அவர்கள் கவர்னருக்கும், ராஜப்ரதிநிதிக்கும் இக்கண்டனத் தீர்மானத்தை அனுப்பப் பல ஆங்கில அச்சு ப்ரதிகளை அச்சிட்டுள்ளார். அதைப் பெற்று ஜில்லா, தாலூகா, கிராமம், தலைவர் தீர்மானத்தை ப்ரேரித்தவர், ஆதரித்து ஆமோதித்தவர், முதலியவர்கள் பெயரை எழுதி ரிஜிஸ்டர் செய்து கவர்னருக்கும்,

ராஜப்ரதிநிதிக்கும் அனுப்பவேண்டும். ஆங்காங்கு பெறுங்கூட்டம் கூடாவிடினும் சிறு சபை கூடி உடனே அனுப்பவேண்டும். ஏற்கனவே ஸ்ரீமதாசாரியாளிடமிருந்தும் வந்திருக்கும் அதை நிறைவேற்றினவரும், இரண்டாம் முறை அனுப்புவது அவச்யமாகும். அனுப்பாதவர்கள் உடனே அனுப்பவேண்டும். ஷடிபாரம் வேண்டியவர்கள் தர்மப்ரசாரக அந்தரங்க காரியதரிசி 154 தம்புசெட்டித்தெரு சென்னைக்குஎழுதவும்.

ஸர் ஹரிசிங்கோர என்றவர் கொண்டுவரும் "வேண்டாத புருஷனை விலக்குதல்" என்றவோர் சட்டமும் தோன்றியிருப்பதால் இவைகளைப்பற்றி பொதுஜன அபிப்பிராயத்தை அறிய அரசாங்கத்தார் உத்திரவின்படி கலெக்டர் அவரறிந்த யூனியன் போர்ட், முனிசிபாலிடி, தாலூகா போர்ட், ஜில்லாபோர்ட், தலைவர்களுக்கு அனுப்பியுள்ளார். ஆஸ்திகர்கள் தாங்களாகவே கலெக்டரிடம் சென்று நமது ஆக்ஷேபங்களை அவர்களிடம் அறிவிக்க வேண்டும். இப்பிரார்த்தனைக்குச் செவி சாய்க்காவிடின் சொல்லவொண்ணுத் துன்பங்கள் தோன்றிடும். ஆதலால்தர்மத்தின் பெயரால் ஆசாரிய பாதுகையின் பேரால் இக்கடமையைச் செய்து முடிக்க விநயத்துடன் தங்களை வேண்டும்.

ஸ்ரீவத்ஸ சிஷ்யன்
கௌண்டின்ய ராமநாதன்

## காலத்தின்கதி.

(250-வது பக்கத்தொடர்ச்சி.)

3. இவ்வித சிறு குழந்தை இருவர்களுக்கும் பிறக்கும் குழந்தை வியாதிக்கும், அல்ப ஆயுளுக்கும் ஆளாகிறது. இதனுல் நம் இந்தியா வீரக்குழந்தைகளை அடைய முடியவில்லை.

4. புருஷர்களைப்போல்ஸ்திரீகளும் படித்தறியாததாலேயே நம் குடும்பங்களை வகிக்கச் சக்தியில்லாமலும் இந்தியாவின்முன்னேற்றத்திற்கு சமபாகம் பெறும் அவர்கள் கைதிகள்போல் அந்தகாரத்தில் மூழ்கி இருந்து ஒரு முன்னேற்றமும் ஸ்வராஜ்யமும் இல்லாமல் புருஷர்கள் நடத்தும் அக்கிரமங்களுக்கெல்லாம் ஈடுபட்டு மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக நேருகிறது. இன்னும் அநேகவித கஷ்டங்களை நீக்கவே இம்மசோதா முக்கியமான

தென்று சென்னையில் டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளும் இந்தியா சட்டஸபையில்ஸ்ரீயான் ஹரிவிலாஸ்சாரதாவும் பரம கருணையுடன் மனமுருகி ஸ்திரீகளைக் கறையேற்றி இந்தியாவுக்கு வீரக் குழந்தைகளை உண்டுபண்ண முன்வந்து மசோதாவை ராஜாங்கத்தில் நீட்டிக்கொண்டு இதைச் சட்டமாக்குங்களென்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

இச்சமாசாரத்தைக் கேட்கும் பலர் அவர்களுக்கு நல்லாசி கூறி அதைச் சட்டமாக்கத்தான் வேண்டுமென்று அவர்களைப் பின்பற்றி நிற்கிறார்கள். நாமும இவ்வுபகாரமுள்ள மசோதாவை ஆதரிக்க யாது தடை என்று கேட்கலாம்? தடையே இல்லை. இவர்கள் என்னென்ன உபகாரம் நேருமென்று எதிர்பார்க்கிறார்களோ, அவ்வுபகாரம் நம் தேசத்திற்குப் பரமோபகாரம்தானு; இவர்கள் கூறும்விதம் இவ்வுபகாரங்கள் நம்முள் இல்லையா? இவர்கள் சொல்படி நடந்து தீருமா என்பதை விசாரிக்கிறதென்று முன்வந்தால் ஒவ்வொருவனும இவர்கள் சொல்வது உபகாரமே அல்ல; மகா அபகாரம் நம் தேசத்தையும், நம்மையும் படுகுழியில் தள்ளி நாட்டைப் பாழாக்கும். சொல்லமுடியாத பல அனார்த்தங்களையும் ஸ்திரீகளைப் பலவிதத்திலும் கெடுத்துவிடும் என்று ஒருவன் சொல்ல முன்வந்தால் உண்மையாய் லோகோபகாரம் செய்யவேண்டுமென்று மனம் புழுங்கி இவர்கள் வந்திருந்தால் இதை அவசியம் கேட்டு நம்பத்தக்கது என்று தோனறினுல் உடனே தன் கொள்கையை விட்டுவிடுவார்கள். ஆகவே உண்மையாய் நல்லெண்ணம் கொண்டவர்கள் லோகத்தைக்கெடுக்க முன்வரமாட்டார்களாகையால் அவைகளை இங்கு விளக்குகிறேன்.

இவர்கள் பால்யத்தில் விவாகம் அதன் அர்த்தத்தையே கெடுத்துவிடுகிறதென்பது; இது உண்மையல்ல. இதன் உண்மை, இது இவ்விதம் பால்யவிவாஹம் செய்வதையே கடமை என்று கொண்டிருக்கும் இந்துக்களின் சிலரான பிராமணர்களது கொள்கையாதெனில் ஆண், பெண் சேர்வது விஷயசுகத்திற்காகத்தான் என்பது எண்ணமே இல்லை. மற்று இது புனிதமாயும் கன்னிகாதானமென்ற மகா புண்யகன்மாவென்றும் இக் கன்னிகாதானத்தால்கன்னியின்பிதாவின்குலம் 21-தலைமுறை புண்யலோகமடையுமென்றும் வேதசாஸ்திரங்களின் பரமகொள்கை என்று

கொண்டே அவ்வித தானம் செய்வதற்கு கன்னிகைக்குக் குறிப்பிட்டிருக்கும் வயதில் மகரிஷிகளின் அபிப்பிராயப்படி நடத்தி வருகின்றனர். இதில் 12-வயதுக்குள் என்று ஒரு மகரிஷி சொன்னம்பாதிலும யாவன்नर्तुमती भवेत् யாவந்ந ருதுமதீ பவேத் எவ்வளவுக்குள் கன்னிகை ருதுவாகமாட்டாளோ அதற்குள் விவாஹம் செய்துவிடு. அவ்விதமில்லாவிடில் அந்த ஸ்திரீ ப்ரௌடையாகிவிட்டால் அவள் விருஷளஸ்திரீ என்றும் அவளை விவாஹம் செய்பவன் விருஷளீபதி என்றும் அவனது தகப்பன் தாய்களுக்குப் ப்ரூணஹத்ததோஷ முண்டாகுமென்றும் கதறி இருக்கிறதைக்கணடு நம் மதத்தின் ஆணையை மீறவேகூடா தென்று பரலோகத்திற்குப் பயந்த நம் முன்னோர்களும் நாமும் தொன்றுதொட்டு நடத்திவருகிறோம். அன்றியும் பிராமணச் சிறுவர்களுக்கு உபநயனம் என்பது எபபடி மறுக்கத்தகாத கன்மாவென்று இப்போதும்நாம் நடத்துகிறோமோ, அதற்கு௮-வயதுதான் முக்கிய காலமென்று ஏற்றுக்கொணடிருக்கிறோமோ அதுபோல்

स्त्रीणामुपनयस्थाने विवाहं मनुरब्रवीत् ।

ஸ்த்ரீணாமுபநயஸ்தாநே விவாஹம் மநுரப்ரவீத் ।

ஸ்திரீகளுக்கு உபநயனஸ்தானத்தில் விவாஹம் செய்யவேண்டுமென்றும் மனு முதலியவர்கள் கட்டளை இட்டிருப்பதாலும் நாம் அதைத் தயங்காது நடத்திவருகிறோம். பிரகிருதம் சட்டம் கொண்டுவருகிறவர்கள் அதை கவனித்துக் கூறுகிறார்களா கவனிக்கவேண்டாமென்றால் நம்மைப்பார்த்து உங்கள் மதம் கெட்டது. மகரிஷிகள் அறிவில்லாதவர்கள், அவர்களை உதறித்தள்ளுங்களென்று பறையடித்துக் கூறுவதாய் ஆகிறது. இதை ஏற்றுக்கொள்ள நம்மவர் முன்வந்தால் அவர்கள் இந்துக்களல்ல வென்று நாம் ஏன் விலக்கக்கூடாது. அவர்களின்பேரில் நம மதத்தை இகழ்ந்ததற்கு மானநஷ்டதாவா ஏன் செய்யக் கூடாது. ஆகவே பொம்மை விவாகமில்லை. சாஸ்திரீயமான திவ்யவிவாகம.

அவர்களது சுகதுக்கங்களுக்கு அவர்களே காரணர்களாகையால் அவர்கள் சம்மதம் வேண்டுமென்பது மற்றொன்று. இதுவும் தவறு. அவர்கள் சுகதுக்கங்களை வெகுவாய் ஆழ்ந்துபார்

த்துச் செய்பவர்கள் அவர்களது மாதாபிதாக்கள் தான். அவர்களுக்குத் தான் நன்கு தெரியும் இவர்களுக்குத் தெரியவே தெரியாது. இவர்கள் ஸ்வதந்திரத்தில் விட்டால் ஏதோ ஒரு தேசததில் நடப்பதுபோல் விவாகாத்துச் சட்டம் தாண்டவமாட வேண்டிவரும்.

2. இவ்விவாகத்தால் பால்ய விதவைகள் அதிகமாவதென்ற எண்ணம் அதுவும் தவறு இவர்கள் சொற்படி 14-வயதிற்கு மேற்பட்டால் அவ்வைதவ்யம் ஏற்படாதா. ஆனால் ப்ரௌடையாகிக் கொஞ்சம் அனுபவித்து விடுகிறார்களல்லவா என்கிறார்கள். உங்கள் சொற்படி அத்தகைய ஸ்திரீகள் மறுபடி விஷய சுகத்திலிறங்கக் கூடாதென்கிறது. அவ்விதமானல் கொஞ்சம் அனுபவித்தபிறகு புருஷனை இழந்தவளுடைய நிலைமையும் பால்யத்தில் இழந்தவளுடைய நிலைமையும் சீர்தூக்கிப் பார்த்தால் அனுபவித்தவளுடைய கதி மிகக்கேவலமாகும். ஆகையால் இவ்வாதம் வீணே.

இனி இவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் அல்பமாய் இருக்கிறதே என்றால் அதுவும் நியாயமில்லை. இப்போது பார்ப்போம் உலகில் இவ்விதம் பால்ய விவாகம்செய்பவர்கள் பிராமணர்களும் பிராமணரல்லாதாரிற் சிலருமே. இவர்களைத் தவிர ப்ரௌடையான பிறகு விவாகம் நடத்திக்கொள்ளும் இந்தியர்கள் எத்துணையோ மடங்கு சங்கியையில் வலுத்தவர்கள். ஆகவே அத்தகையோர்கட்குப் பிறக்கும் குழந்தைகள் பலசாலிகளாய் இருக்கின்றனவா இல்லவேயில்லை. பார்க்குமிடத்து அவர்கள் குழந்தைகள் பிராமணக்குழந்தைகளைக் காட்டிலும் பலமற்றிருக்கின்றன. இதற்குக் காரணம் ஆகாரமென்பதையே ஏற்றுக்கொள்ள வேண்டும்

புருஷர்களைப்போல் ஸ்திரீகளும்படிக்கவேண்டும். நம்மைப்போல் சம அந்தஸ்து உரிமை அளிக்கவேண்டுமென்பது. இவ்விஷயத்தைப்பற்றி நம் ஆரியதர்மத்தில் முன் ஒரு சமயம் ஸ்திரீகளின் வித்யை என்று விஸ்தாரமாய்க் கூறியிருக்கிறபடியால் அதையே இங்கு வரிப்பது அனுசிதமென்று கொண்டு சுருங்கச் சொல்வோம். (இன்னும் வரும்.)

M. N, சுப்பிரமண்யசாஸ்திரியள்.